**TNVR1D0001152020**

**குற்றவியல் நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம், திருவில்லிபுத்தூர்.**

முன்னிலை.திருமதி.த. அபர்ணாதேவி, பி.ஏ., பி.எல்.,

குற்றவியல் நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம், திருவில்லிபுத்தூர்.

2026 ம் ஆண்டு ஜீலை திங்கள் 08 ம் நாள் புதன்கிழமை

**CC.No.115/2020**

***CNR. No. TNVR1D0001152020***

அரசுக்காக / காவல் ஆய்வாளர்/
ஸ்ரீவில்லிப்புத்தூர் நகர் காவல் நிலையம்/
குற்ற எண்.195/2018 .....குற்ற முறையிடுபவர்

–எதிர்–

1) மாரிமுத்து,
த.பெ.முருகேசன்,
பூவாணி, ஸ்ரீவில்லிப்புத்தூர்.

2) முத்துராஜ்,
த.பெ.முருகேசன்
பூவாணி, ஸ்ரீவில்லிப்புத்தூர்.

3) முருகன்,
த.பெ.கூடாண்டி
பூவாணி, ஸ்ரீவில்லிப்புத்தூர்.

4) கூடாண்டி(இறந்துவிட்டார்)
த.பெ.வேல் ஆசாரி,
பூவாணி, ஸ்ரீவில்லிப்புத்தூர்.

5) மகாலட்சுமி
க.பெ.குருசாமி,
பூவாணி, ஸ்ரீவில்லிப்புத்தூர்.

6) முத்துலட்சுமி,
க.பெ.முருகேசன்,
பூவாணி, ஸ்ரீவில்லிப்புத்தூர்.



ABARNA DEVI T

Digitally signed by ABARNA DEVI T

7) முத்துலட்சுமி,
க.பெ.மாரிமுத்து,
பூவாணி, ஸ்ரீவில்லிப்புத்தூர்.

8) ஆதிலட்சுமி,
க.பெ.முருகன்,
பூவாணி, ஸ்ரீவில்லிப்புத்தூர்.

9) பாண்டியம்மாள்,
க.பெ.மாணிக்கம்,
பூவாணி, ஸ்ரீவில்லிப்புத்தூர்.

10) குருவம்மாள்,
க.பெ. கூடாண்டி,
பூவாணி, ஸ்ரீவில்லிப்புத்தூர். .....எதிரிகள்

வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் : 11.03.2019

இறுதி விசாரணை நடைபெற்ற நாள் : 06.07.2026

தீர்ப்பு பகரப்பட்ட நாள் : 08.07.2026

எதிரிகளுக்காக : திரு.S.தங்கமுடிபாண்டியராஜ், பி.ஏ.,பி.எல்., கற்றறிந்த வழக்கறிஞர்

| Case Summary Details as per The Hon'ble Madras High Court ROC No.814/2020/RG/F1 dt.1.4.2021 | | |
|---|---|---|
| **Sl.No.** | **Particulars** | **Date** |
| i) | The Period of the remand of the accused | A1 to A10 - AB on 04.05.2018 |
| ii) | The date of filing of the complaint/final report in the Court | A1 to A10 - 07.05.2018 |
| iii) | The date committal of the case to the Court of Session | NIL |
| iv) | The date of questioning of the accused under section 240 | 10.05.2019 |
| v) | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts : | Nil |
| vi) | Date of examination in – chief and cross-examination of a witness :<br>1. PW-1 26.08.2021, 03.02.2026<br>2. PW-2 16.11.2021, 03.02.2026<br>3. PW-3 10.06.2022, 23.02.2026<br>4. PW-4 10.06.2022, 03.02.2026<br>5. PW-5 15.07.2022, 15.07.2022<br>6. PW-6 15.07.2022, 15.07.2022 | |



ABARNA DEVI T
Digitally signed by ABARNA DEVI T

| | | |
|---|---|---|
| | 7. PW-7 27.09.2022, 27.09.2022<br>8. PW-8 27.09.2022, 27.09.2022<br>9. PW-9 10.01.2023, 27.02.2026<br>10.PW-10 22.09.2023, 27.02.2026<br>11.PW-11 07.03.2024, 07.03.2024<br>12.PW-12 10.07.2025, 10.07.2025<br>13.PW-13 29.06.2026, 29.06.2026 | |
| vii) | Date of examination of the accused under Section 313 of the Code | 03.07.2026 |
| viii) | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be | Nil |
| ix) | Grant of stay by superior Courts and the results thereof | NIL |

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடப்பட்டது | : | 1 முதல் 5 எதிரிகள் மீது 147, 294(b), 323, 355, 506(1) இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழும், 6 முதல் 10 எதிரிகள் மீது 147, 294(b), 323, 506(1) இதச சட்டத்தின் கீழும் குற்றம் முறையிடப்பட்டது. |
| எதிரிகளின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | 1 முதல் 5 எதிரிகள் மீது 147, 294(b), 323, 355, 506(1) இதச சட்டத்தின் கீழும், 6 முதல் 10 எதிரிகள் மீது 147, 294(b), 323, 506(1) இதச சட்டத்தின் கீழும் குற்றம் வனையப்பட்டுள்ளது. |
| எதிரிகளின் பதில் | : | குற்றவாளிகள் இல்லை. |
| தீர்மானம் | : | 1. முடிவாக, 4 வது எதிரி இறந்துவிட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது. 1,2,3,5 எதிரிகள் மீது 147, 294(b), 323, 355, 506(1) இதச சட்டத்தின் கீழும், 6 முதல் 10 எதிரிகள் மீது 147, 294(b), 323, 506(1) இதச சட்டத்தின் கீழும் குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு நல்கி 1,2,3,5 எதிரிகளை பிரிவுகள் 147, 294(b), 323, 355, 506(1) இதச சட்டத்தின் கீழும், 6 முதல் 10 எதிரிகளை பிரிவுகள் 147, 294(b), 323, 506(1) இதச சட்டத்தின் கீழும் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br>**2.** இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை. |

ABARNA DEVI T

Digitally signed by ABARNA DEVI T

## தீர்ப்புரை

**இறுதி அறிக்கையின் சுருக்கம் –**

1) இவ்வழக்கில் 1வது எதிரி வீட்டிற்கு பின்புறம் பொதுவான இடம் உள்ளதாகவும், அதில் பெரிய புளியமரம் உள்ளதாகவும், மேற்படி இடத்தில் ஊரில் உள்ள சிறுபிள்ளைகள் அங்கே தான் விளையாடுவதாகவும், தெருவில் உள்ள பெண்கள் எல்லாம் அங்கேதான் உட்கார்ந்து பேசுவதாகவும், 1வது எதிரியின் மனைவியான 7வது எதிரி அவரது வீட்டின் மாடியில் பாத்ரூமில் இருந்து மலம் கழித்து தண்ணீர் ஊற்றி பைப் வழியாக அந்த பொது இடத்தில் வந்ததாகவும், அவரது வீட்டின் முன்னால் உள்ள வாறுகால் வழியாக சென்றதாகவும், அது சம்மந்தமாக வாதி குடும்பத்திற்கும் எதிரி குடும்பத்திற்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்த நிலையில், கடந்த 30.04.2018ம் தேதி மதியம் 3.00மணியளவில் வாதியும் அவரது மகன் வெங்கடேசும் வாதியின் சித்தி மகள் அமுதாவும் வாதியின் வீட்டினுள் இருந்தபோது 1 முதல் 10 எதிரிகள் வாதியின் வீட்டு வாசலுக்கு வந்து வாதியைப்பார்த்து ஏண்டி தேவிடியா பொது வாறுகாலில் அசிங்கம் போனா உனக்கு என்ன அதுக்கு புகார் கொடுத்து அசிங்கப்படுத்துறியா என்று அசிங்கமாக பேசி வாதிக்கு மன உளைச்சலை ஏற்படுத்தி பிரச்சனை செய்ததாகவும், அதற்கு வாதியும் அவரது மகன் வெங்கடேஷ், தங்கச்சி அமுதாவும் வீட்டிலிருந்து வெளியே வந்து எதுவாக இருந்தாலும் ஊர்ல வச்சு பேசிக்குவோம் என்று சொன்னதற்கு 1,7,6 எதிரிகள் வாதியைப்பார்த்து உங்களை அடித்து கொன்னதான் எங்க பிரச்சனை தீரும் என்று சொன்னவுடன் 6,7,8 எதிரிகள் வாதியின் தலை முடியைப் பிடித்து தரதரவென இழுத்து வாதியின் முதுகில் கையால் குத்தி பின் கழுத்தில் வலியுடன் கூடிய ஊமை காயத்தையும் இடது கால் 2வது விரலில் சிராயப்பு காயத்தையும், இடது கை சுண்டு விரலில் சிராய்ப்பு காயமான சாதாரண காயங்களை ஏற்படுத்தியும், அமுதாவை 9,10 எதிரிகள் தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளியும் 1 முதல் 5எதிரிகள் அமுதாவை பெண் என்றும் பாராமல் காலில் போட்டிருந்த செருப்பை கழட்டி மாறி மாறி அடித்து அசிங்கப்படுத்தியும், 5,9 எதிரிகள் இடுப்பிலும் தோள்பட்டையிலும் அமுதாவை மிதித்து இடது கண் அருகில் வீக்கக்காயத்தையும் இடது கன்னத்தில் வீக்கக்காயத்தையும், வலது கை பெருவிரலில்



ABARNA DEVI T
Digitally signed by ABARNA DEVI T

சிராய்ப்பு காயமான சாதாரண காயங்களை ஏற்படுத்தியும் 1 முதல் 5 எதிரிகள் வாதியின் மகன் வெங்கடேஷை பார்த்து சின்னக்கூதி மக்களுக்கு நம்மள எதிக்கிற துணிச்சல் வந்திருச்சு என்று சொல்லி 5 பேரும் வலது தோள்பட்டையிலும் இடுப்பு கை கால்களில் அடித்து வலது தோள்பட்டையில் சிராய்ப்பு மற்றும் வீக்கக்காயத்தையும் கழுத்தின் வலது பக்கம் சிராய்ப்பு காயமான சாதாரண காயத்தை ஏற்படுத்தியும், இந்த சம்பவத்தை பார்த்த சாட்சிகள் எதிரிகளை சத்தம் போட்டு போகச்சொன்ன போது 1 முதல் 10 எதிரிகள் போகும்போது இன்னைக்கு தப்பிச்சிட்டீங்க என்னைக்கிருந்தாலும் உங்கள் சாவு எங்க எங்க கையில்தான் என்று கொலைமிரட்டல் விடுத்து உயிர்பயத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக 1 முதல் 5 எதிரிகள் மீது 147, 294(b), 323, 355, 506(1) இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழும், 6 முதல் 10 எதிரிகள் மீது 147, 294(b), 323, 506(1) இதச சட்டத்தின் கீழும் ஸ்ரீவில்லிப்புத்தூர் நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களால் இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

2) வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி அழைப்பாணையின் படி எதிரிகள் ஆஜராகி, எதிரிகளுக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் நகல்கள் குவிமுச பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. பின்னர் எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்கி 1 முதல் 5 எதிரிகள் மீது 147, 294(b), 323, 355, 506(1) இதச சட்டத்தின் கீழும், 6 முதல் 10 எதிரிகள் மீது 147, 294(b), 323, 506(1) இதச சட்டத்தின் கீழும் குற்றச்சாட்டினை வனைந்து வினவியபோது அவர் மீதான குற்றத்தினை எதிரி மறுத்ததால் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு வழி வகை செய்யப்பட்டது.

3) அரசு தரப்பில் மொத்தம் 15 சாட்சிகள் பட்டியல் இடப்பட்டும், அ.சா.1 முதல் அ.சா.13 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ 7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

3.1) 4 வது எதிரி கடந்த 30.12.2020 ம் தேதி இறந்துவிட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது.

4) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகள் குறித்து குவிமுச 313 (1) (ஆ) பிரிவின் கீழ்



ABARNA DEVI T Digitally signed by ABARNA DEVI T

விசாரித்தபோது எதிரிகள் பொய் சாட்சியம் என்றும், தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் யாரும் இல்லை என கூறினார்கள் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டது.

5) அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

6) எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், எதிரிகளை விடுதலை செய்ய வேண்டுமென்றும் வாதிட்டார்.

**பிரச்சனை**

7) அரசு தரப்பில் 1,2,3,5 எதிரிகள் மீது 147, 294(b), 323, 355, 506(1) இதச சட்டத்தின் கீழும், 6 முதல் 10 எதிரிகள் மீது 147, 294(b), 323, 506(1) இதச சட்டத்தின் கீழும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே தீர்வு செய்யப்படவேண்டிய பிரச்சனை ஆகும்.

**தீர்வு**

8) கடந்த 30.04.2018 ம் தேதி மதியம் 3.00 மணியளவில் அ.சா.1 ம் அவரது மகன் அ.சா.10 ம் அ.சா.1 ன் சித்தி மகள் அ.சா.2 ம் அ.சா.1 ன் வீட்டினுள் இருந்தபோது 1 முதல் 10 எதிரிகள் அ.சா.1 ன் வீட்டு வாசலுக்கு வந்து அ.சா.1 ஐ பார்த்து அசிங்கமாக பேசி அ.சா.1 ற்கு மன உளைச்சலை ஏற்படுத்தி பிரச்சனை செய்தும், 6,7,8 எதிரிகள் அ.சா.1 ன் தலைமுடியைப் பிடித்து தரதரவென இழுத்து முதுகில் கையால் குத்தி பின் கழுத்தில் வலியுடன் கூடிய ஊமை காயத்தையும், இடது கால் 2 வது விரலில் சிராயப்பு காயத்தையும், இடது கை சுண்டு விரலில் சிராய்ப்பு காயமான சாதாரண காயங்களை ஏற்படுத்தியும், அ.சா.2 ஐ 9,10 எதிரிகள் தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளியும் 1 முதல் 5 எதிரிகள் அ.சா.2 ஐ பெண் என்றும் பாராமல் காலில் போட்டிருந்த செருப்பை கழட்டி மாறி மாறி அடித்து அசிங்கப்படுத்தியும், 5,9 எதிரிகள் இடுப்பிலும்



ABARNA DEVI T Digitally signed by ABARNA DEVI T

தோள்பட்டையிலும் அ.சா.2 ஐ மிதித்து இடது கண் அருகில் வீக்கக்காயத்தையும் இடது கன்னத்தில் வீக்கக்காயத்தையும், வலது கை பெருவிரலில் சிராய்ப்பு காயமான சாதாரண காயங்களை ஏற்படுத்தியும் 1 முதல் 5 எதிரிகள் அ.சா.10 ஐ பார்த்து அசிங்கமாக பேசி 5 பேரும் வலது தோள்பட்டையிலும் இடுப்பு கை கால்களில் அடித்து வலது தோள்பட்டையில் சிராய்ப்பு மற்றும் வீக்கக்காயத்தையும் கழுத்தின் வலது பக்கம் சிராய்ப்பு காயமான சாதாரண காயத்தை ஏற்படுத்தியும், இந்த சம்பவத்தை பார்த்த சாட்சிகள் எதிரிகளை சத்தம் போட்டு போகச்சொன்ன போது 1 முதல் 10 எதிரிகள் போகும்போது கொலைமிரட்டல் விடுத்து உயிர்பயத்தை ஏற்படுத்தியதாக அ.சா.1, சார்பு ஆய்வாளர் அ.சா.12 டம் அ.சா.ஆ.1 புகார் மனுவை அளித்துள்ளார்.

8.1) பின்னர் அ.சா.12 புகார் மனுவின் அடிப்படையில் அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், பின்னர் திரு.கண்ணன் சார்பு ஆய்வாளர் அவர்கள் முதல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டும், திரு.சிராஜீதீன் சார்பு ஆய்வாளர் அவர்கள் தொடர்விசாரணைக்கு எடுத்துக்கொண்டும், சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜர், அ.சா.ஆ.7 மாதிரிவரைபடம் தயார் செய்தும், பின்னர் இவ்வழக்கில் காயம்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்து மருத்துவரை விசாரித்து அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.5 வரையான விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகள் பெற்றும், பின்னர் சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்து 1 முதல் 5 எதிரிகள் மீது 147, 294(b), 323, 355, 506(1) இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழும், 6 முதல் 10 எதிரிகள் மீது 147, 294(b), 323, 506(1) இதச சட்டத்தின் கீழும் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

9) இந்த வழக்குச்சம்பவத்தில் காயமுற்றதாக சொல்லப்படும் புகார்தாரரான அ.சா.1 தனது முதல் விசாரணையில் சம்பவம் பற்றி கூறியிருந்தாலும் தனது குறுக்கு விசாரணையில், சம்பவம் நடந்த இடத்தில் கூட்டமாக இருந்ததால் யார் யார் அடித்தார்கள் என்று தன்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றும், முதல் விசாரணையில் தான் சொன்னதுபோல் தனக்கு ஏற்பட்ட காயங்கள் எதிரிகளால் எற்படவில்லை என்றும், சந்தேகத்தின் அடிப்படையில் தான் தான் எதிரிகள் மீது புகார்



ABARNA DEVI T
Digitally signed by ABARNA DEVI T

கொடுத்தேன் என்றும், எதிரிகள் தன்னை தாக்கவில்லை என்றும், போலீசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் அவ்வாறு சொன்னதாகவும், எதிரிகளுக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், தான் எதிரிகளுடன் தற்போது சமாதானமாக போகிறேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், தன்னை யாரும் வற்புறுத்தவில்லை என்றும், எதிரிகளுடன் சமாதானமாகி பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

10) அதுபோல் வழக்குச் சம்பவத்தில் காயமுற்றதாக சொல்லப்படும் அ.சா.2, அ.சா.10 ஆகியோர் தங்களது முதல் விசாரணையில் சம்பவம் பற்றி கூறியிருந்தாலும் தங்களது குறுக்கு விசாரணையில், சம்பவம் நடந்த இடத்தில் கூட்டமாக இருந்ததால் யார் யார் அடித்தார்கள் என்று தன்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றும், முதல் விசாரணையில் தான் சொன்னதுபோல் தனக்கு ஏற்பட்ட காயங்கள் எதிரிகளால் எற்படவில்லை என்றும், எதிரிகள் தன்னை தாக்கவில்லை என்றும், போலீசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் அவ்வாறு சொன்னதாகவும், எதிரிகளுக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், தான் எதிரிகளுடன் தற்போது சமாதானமாக போகிறேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், தன்னை யாரும் வற்புறுத்தவில்லை என்றும், எதிரிகளுடன் சமாதானமாகி பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்கள்.

11) இவ்வழக்குச்சம்பவத்தில் காயமுற்றதாக சொல்லப்படும் அ.சா.1, அ.சா.2, அ.சா.10 ஆகியோர் எதிரிகளால் தங்களுக்கு காயம் எற்படவில்லை என கூறி பிறழ்சாட்சியாகியுள்ள நிலையில், மற்ற கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.3, அ.சா.4, அ.சா.5, அ.சா.9 ஆகியோரின் சாட்சியங்கள் எதிரிகள் தான் சம்பவத்தை நிகழ்த்தினார்கள் என்பதை நிரூபிப்பதற்கு போதுமானதாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

12) அரசு தரப்பு வழக்கினை ஒத்துரைத்து காயம்பட்ட அ.சா.1, அ.சா.2, அ.சா.10 ஆகியோர் சாட்சியம் அளிக்காத நிலையில், எதிரிகள் சட்ட விரோதமாக ஒன்றுகூடி அரசு தரப்பு சாட்சிகளை தாக்கி காயம் ஏற்படுத்தியதாகவும், ஆபாசமாக பேசி, கொலைமிரட்டல் விடுத்து அதனால் சம்பவ இடத்தில் இருந்த சாட்சிகளுக்கோ,



ABARNA DEVI T

Digitally signed by ABARNA DEVI T

பொதுமக்களுக்கோ அருவருப்பு ஏற்பட்டது என்பதை அரசு தரப்பு நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

13) முடிவாக, 4 வது எதிரி இறந்துவிட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது. 1,2,3,5 எதிரிகள் மீது 147, 294(b), 323, 355, 506(1) இதச சட்டத்தின் கீழும், 6 முதல் 10 எதிரிகள் மீது 147, 294(b), 323, 506(1) இதச சட்டத்தின் கீழும் குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு நல்கி 1,2,3,5 எதிரிகளை பிரிவுகள் 147, 294(b), 323, 355, 506(1) இதச சட்டத்தின் கீழும், 6 முதல் 10 எதிரிகளை பிரிவுகள் 147, 294(b), 323, 506(1) இதச சட்டத்தின் கீழும் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

14) இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை.

15) எதிரிகளும், ஜாமீன்தாரர்களும் எழுதிக்கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026 ம் வருடம் ஜீலை மாதம் **8** ம் நாளாகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ABARNA DEVI T — Digitally signed by ABARNA DEVI T

குற்றவியல் நீதித்துறை நடுவர்
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்.

<u>1. அரசுத் தரப்பு சாட்சிகள் –</u>

அ.சா.1 – திருமதி.முத்துமாரி (புகார்தாரர்)
அ.சா.2 – திருமதி.அமுதா

அ.சா.3 – திரு.கோவிந்தராஜ்
அ.சா.4 –திருமதி.முத்துமாரி
அ.சா.5 – திரு.ஞானவேல்
அ.சா.6 – திரு.சுப்புராஜ்
அ.சா.7 – திரு.பிச்சைவேல்
அ.சா.8 – திரு.கணேசன்
அ.சா.9 – திருமதி.மீனா
அ.சா.10 – திரு.வெங்கடேஷ்
அ.சா.11 – திரு.ரமேஷ்பாபு (மருத்துவர்)
அ.சா.12 – திரு,ராஜேஸ்கண்ணா (சிறப்பு சார்பு ஆய்வாளர்)
அ.சா.13 – திரு.செல்லப்பன் (சார்பு ஆய்வாளர்)

**2. அரசுத் தரப்பு சான்றாவணங்கள் –**

அ.சா.ஆ.1 – புகார்மனு
அ.சா.ஆ.2 – பார்வை மகஜர்
அ.சா.ஆ.3 – அ.சா.1 ன் விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று
அ.சா.ஆ.4 – அ.சா.2 ன் விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று
அ.சா.ஆ.5 – அ.சா.10 ன் விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று
அ.சா.ஆ.6 – முதல் தகவல் அறிக்கை
அ.சா.ஆ.7 – மாதிரிவரைபடம்

**3. அரசு தரப்பு சான்று பொருள்கள்**

இல்லை.

**4. எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள்கள்** –

இல்லை.

ABARNA DEVI T Digitally signed by ABARNA DEVI T

குற்றவியல் நீதித்துறை நடுவர்
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்.

1. விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு காவல் துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.

ABARNA DEVI T Digitally signed by ABARNA DEVI T

குற்றவியல் நீதித்துறை நடுவர்
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்.